## APRIL 1995



### FOURTH B.S.M.S. DEGREE EXAMINATION.

### Paper I — NOI ANUGAVIDHI OZHUKKAM ETC

Time : Three hours Maximum : 100 marks

Answer any FIVE questions.

All questions carry equal marks.

1. (அ) நீவிர் சென்று வந்த தொழிற்சாலையில் கணித்த நோய் அனுகா விதிமுறைகளை எழுதுக. (8)

(ஆ) காற்றில் மலினங்கள் எவ்வாறு தோன்றுகின்றன? காற்றின் மூலம் பரவும் தொத்து நோய்கள் யாவை? அவைகளை எவ்வாறு தடுப்பீர்? (7)

2. உடற்பயிற்சியினால் உண்டாகும் நன்மைகள், மேற்கொள்ள வேண்டிய உணவாதிகள், உடற்பயிற்சி செய்ய ஏற்ற காலம், இடம், அளவு, பயிற்சி செய்யத் தகாதவர்கள் முதலியவற்றை விவரிக்க. (20)

3. (அ) கண் பழுதாவதற்கும், குருடாவதற்கும் அகத்தியர் கூறும் காரணங்கள் யாவை? அவற்றை தடுக்கும் நெறிகளைக் கூறுக. (8)

(ஆ) குழந்தைகளை பேணும் முறைகளை எழுதுக. (7)





4. தற்காலத்தில் பிணங்களை எவ்வெவ் வகையில் அடக்கம் செய்கின்றனர்? வைசூரி நோயினால் இறந்தவரை எங்ஙனம் அடக்கம் செய்ய வேண்டும்? பொதுவாக இடுதல் நன்றா? சுடுதல் நன்றா? ஆய்வு செய்க. (15)

5. வீடு கட்டுவதற்கு சகல வசதிகளையும் பெறுவதற்குரிய வீட்டை எப்படி அமைக்கவேண்டும்? சரியாக அமைக்காவிடில் உண்டாக்கும் கெடுதிகள் யாவை? வீடு கட்டத் தகுந்த மனை இலக்கணம் கூறுக. (15)

6. சிறுகுறிப்பு வரைக : (20)

(அ) உமி கலந்த அன்னம்.

(ஆ) பஞ்சமுட்டிக் கஞ்சி.

(இ) விழுல் வீடு.

(ஈ) காலைக் குளியல்.

---

**NOVEMBER 1995**

[MB 1041]

# Fourth B.S.M S. Degree Examination

Paper I - NOI ANUGAVIDHI OZHUKKAM ETC

Time : Three hours Maximum : 100 marks

Answer any FIVE questions

All questions carry equal marks.

1. நோய் அணுகாவிதி ஒழுக்கம் பற்றி தேரையர் கூறும் நெறிகள் யாவை? (20)

2. தற்காலச் சுற்றுப்புறச் சூழ்நிலை மாசுபடக் காரணங்கள் யாவை? அவைகளால் ஏற்படும் நோய்களையும், அவற்றி லிருந்து விடுபட கடைபிடிக்க வேண்டிய தடுப்பு நெறி முறைகளை எழுதுக? (15)

3. சூரிய ஒளியினால் ஏற்படும், நன்மை தீமைகள் யாவை? அதன் ஒளிக் குளியலால் ஏற்படும் பயன்களையும், இக்குளியல் செய்யக் கூடாதவர்களையும் விவரிக்கவும். (15)

4. நித்திரை செய்விதம், காலம் அளவையைக் கூறி, நித்திரை பங்கத்தினால் நேரிடும் துன்பங்களையும் கூறுக. (15)

5. கண் பழுதாவதற்கும், குருடாவதற்கும் அகத்தியர் கூறும் காரணங்கள் யாவை? அவற்றை தடுக்கும் நெறிகளைக் கூறுக. (15)

6. கொள்ளை நோய்கள் யாவை? அவைகள் எக்காலத்தில் எப்படி பரவுகின்றன? ஊழிநோய் வராது தடுக்கவும், பரவாமல் இருக்கவும், வந்தபின் என்ன செய்யவேண்டும் என்பதனையும் விவரி. (20)

## APRIL 1996

[AK 1051]

FOURTH B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — NOI ANUGAVIDHI OZHUKKAM ETC.,

Time : Three hours　　　　Maximum : 100 marks

Answer any FIVE questions.

All questions carry equal marks.

1. 'நீரை குறுக்கி' என்று சித்தர்கள் கூறுவதின் பொருள் என்ன? நீரின் இயற்கை செயற்கைச் சத்திகளை எழுதி நகரங்கட்கும் கிராமங்கட்கும் நீரளித்தல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை ஒப்பு நோக்குக. (20)

2. குழந்தைகளை பேணும் முறைகளை எழுதுக. குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதின் அவசியத்தை விவரிக்க. (20)

3. தொத்து நோய் என்றால் என்ன? அவைகளின் பெயர்களை எழுதி, தொத்து நோய் தோன்றாமலும் பரவாமலும் காக்கும் முறைகளை எழுதுக. (20)

4. தற்காலத்தில் பிணங்களை எவ்வெவ்வகையில் அடக்கம் செய்கின்றனர்? பொதுவாக இடுதல் நன்றா? சுடுதல் நன்றா? ஆய்வு செய்க. (20)

5. மெய், வாய், கண் ஆகிய பொறிகளில் பிணி வராமல் காப்பது எங்ஙனம்? (20)

6. சிறு குறிப்பு வரைக : (20)

(அ) ஒழுக்கம்

(ஆ) யோகாசனம்

(இ) 'நோயில்லா நெறி விட்டோர் குருபி'

(ஈ) கிருமிகள்.

## APRIL 1997



சித்த மருத்துவ அறிஞர்

### FOURTH B.S.M.S. DEGREE EXAMINATION.

### Paper I — NOI ANUGAAVIDHI OZHUKKAM ETC.,

Time : Three hours                                        Maximum : 100 marks

Answer Section A and B separately.

Answer ALL questions.

### SECTION A

1. தொழில் சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு (Occupational diseases) ஏற்படும் நோய்கள் யாவை? அதனைத் தடுக்கும் வழிமுறைகளை விவரி. (15)

2. "அற்றால் அளவறிந்து உண்க" – என்ற திருவள்ளுவரின் கூற்றை அறிவியல் கருத்துடன் ஒப்பு நோக்குக. (15)

3. கால ஒழுக்கங்களில் நலமான வாழ்விற்கு கடைப் பிடிக்க வேண்டிய விதி மற்றும் உணவு முறைகளைக் குறிப்பிடுக. (15)

### SECTION B

4. நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் முறை யாது? சித்த மற்றும் தற்கால மருத்துவ அறிவியலுடன் ஒப்பு நோக்குக. (15)

5. குழந்தை காப்பகத்தில் வழங்கும் உணவுகள் நோய் தடுப்பாற்றலை எவ்வாறு ஏற்படுத்துகின்றது. சித்த மருத்துவ உணவுப் பொருட்களை எவ்வாறு பயன்படுத்த முடியும்? தெளிவு படுத்துக. (15)





6. நோயணுகாதிருக்க – உடற்பயிற்சி மற்றும் சரப் பயிற்சியின் பயன்களைக் குறிப்பிடுக. (10)

7. குறிப்பு வரைக : (10)

   (அ) தாம்பூலம் உட்கொள்ளும் முறை.

   (ஆ) பற்களின் பாதுகாப்பு.

## OCTOBER 1997

# [MS 1111]

சித்த மருத்துவ அறிஞர்

FOURTH B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — NOI ANUGAAVIDHI OZHUKKAM ETC.,

நோய் அனுகாவிதி ஒழுக்கம்

Time : Three hours    Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

## SECTION A

1. (அ) திருவள்ளுவர் கூறிய உணவின் மாறுபாடுகளை விவரி. (10)

(ஆ) செவியிலும், நாசியிலும் நோய் வராது தடுக்கும் வழிகளைக் கூறுக. (10)

2. கொள்ளை நோய்கள் யாவை? அவைகள் எக்காலத்தில் எப்படி பரவுகின்றன? ஊழிநோய் வராது தடுக்கவும், பரவாமல் இருக்கவும், வந்தபின் என்ன செய்ய வேண்டும் என்பதனையும் விவரி. (20)

3. சிறு குறிப்பு வரைக :

(அ) முன்பனிக்கால ஒழுக்கம்.

(ஆ) சுத்த நீரை பெறும் முறை. (10)



# [MS 1111]

## SECTION B

4. (அ) காற்றில் மலினங்கள் எவ்வாறு தோன்றுகிறது? காற்றின் மூலம் பரவும் தொத்துநோய்கள் யாவை? அவைகளை எவ்வாறு தடுப்பீர்? (10)

(ஆ) சூரிய ஒளியினால் ஏற்படும் நன்மை தீமைகள் யாவை? அதன் ஒளிக்குளியால் ஏற்படும் பயன்களையும், இக்குளியல் செய்யக்கூடாதவர்களையும் விவரி. (10)

5. உடற்பயிற்சியினால் உண்டாகும் நன்மைகள், மேற் கொள்ள வேண்டிய உணவாதிகள், உடற்பயிற்சி செய்ய ஏற்ற காலம், இடம், அளவு, பயிற்சி செய்யத் தகாதவர்கள் முதலியவற்றை விவரி. (15)

6. சிறுபொழுது, பெரும்பொழுது என்றால் என்ன? சுகவாழ்க்கைக்கு அவ்விரு காலங்களில் கடைபிடிக்கும் உணவு முதலிய வழிமுறைகளை விளக்குக. (15)

**APRIL 1998**

**[SV 1111]**

சித்த மருத்துவ அறிஞர்

FOURTH B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — NOI ANUGAAVIDHI OZHUKKAM ETC.

(நோய் அணுகாவிதி ஒழுக்கம்)

Time : Three hours — Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

## SECTION A

1. தற்கால சுற்றுப்புறச் சூழ்நிலை மாசுபடக் காரணங்கள் யாவை? அவைகளால் ஏற்படும் நோய்களையும், அவற்றிலிருந்து விடுபட கடைபிடிக்க வேண்டிய தடுப்பு நெறிமுறைகளை எழுதுக. (20)

2. கண் பழுதாவதற்கும் குருடாவதற்கும் அகத்தியர் கூறும் காரணங்கள் யாவை? அவற்றை தடுக்கும் நெறிகளைக் கூறுக. (15)

3. வீடு கட்டுவதற்கு சகல வசதிகளையும் பெறுவதற்குரிய வீட்டை எப்படி அமைக்க வேண்டும்? சரியாக அமைக்காவிடில் உண்டாகும் கெடுதிகள் யாவை? வீடுகட்டத் தகுந்த மனை இலக்கணத்தையும் கூறுக. (15)

## SECTION B

4. (அ) உயிர் வாழ்வதற்கு சுவாசத்தின் இன்றியமையாத் தன்மையையும் தக்க முறையில் பயின்ற மூச்சுப் பயிற்சியால் நாம் பெறும் நன்மைகளையும் விவரி. (10)

(ஆ) கனிகளை உண்பது அவசியமா? ஏன் உணவுக்கு முன்னும், பின்னும் இருகாலத்தும் உண்ணக் கூடிய கனிகள் யாவை? (5)

5. கிருமிகளால் ஏற்படும் நோய்கள் அணுகா வண்ணம் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் யாவை? பண்டைக் கருத்துக்களுடன் நவீன அறிவியல் கருத்துக்களை இணைத்து ஆய்வு செய்க. (20)

6. நித்திரை செய்விதம், காலம், அளவு, நித்திரை இன்மை பங்கம் இவற்றினால் உண்டாகும் குற்றங்கள், இவை வராது தடுக்கும் வழி வகைகளையும் கூறுக. (15)

---

## OCTOBER 1998

## [SM 1111]

சித்த மருத்துவ அறிஞர்

FOURTH B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — NOI ANUGAAVIDHI OZHUKKAM ETC.

(நோய் அணுகாவிதி ஒழுக்கம்)

Time : Three hours | Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answswer ALL questions.

### SECTION A

1. சுற்றுப்புற சூழல் மாசுபாடு அடைவதால் உண்டாகும் விளைவுகள் பற்றியும், அதை நீக்க சித்தர்கள் கூறிய கருத்துக்களுடன் நவீன கருத்துக்களையும் ஒப்பு நோக்கி ஆய்வு செய்க. (20)

2. தேரையர் கூறியிருக்கின்ற நோய் அணுகாதிருக்கும் விதிகளை விரிவாக எழுதுக. (15)

3. உடற்பயிற்ச்சிக்கும் யோகாசனத்திற்கும் உள்ள வேறுபாடு யாவை? யோகாசனம் செய்வதால் உண்டாகும் நன்மைகளை எழுதுக. (15)

### SECTION B

4. கொள்ளை நோய் என்றால் என்ன? பிளேக் நோய் பற்றி விவரித்து, தடுக்கும் முறைகளையும் விவரித்து எழுதுக. (15)

5. 14 வேகங்களின் பெயர்களை மட்டும் எழுதி, அதில் நித்திரை செய்விதம், காலம், அளவு நித்திரை — இன்மையால் உண்டாகும் குறிகுணம், இவை வராது தடுக்கும் வழி வகைகளை கூறுக. (15)

6. சிறு குறிப்பு வரைக :–

(அ) "நோயில்லா நெறி விட்டோர் குருபி"

(ஆ) வாஸ்து புருஷன்

(இ) நலங்குமா

(ஈ) ஒட்டு நோய்கள். (20)

APRIL 1999

[SG 1111]

சித்த மருத்துவ அறிஞர்

FOURTH B.S.M.S DEGREE EXAMINATION.

Paper I — NOI ANUGAAVIDHI OZHUKKAM ETC.

(நோய் அணுகாவிதி ஒழுக்கம்)

Time : Three hours Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

SECTION A

1. "மாறுபாடில்லா உண்டி" என்பதை விளக்கி எழுதுக. (15)

2. கண் பழுதாவதற்கும், குருடாவதற்கும் அகத்தியர் கூறும் காரணங்கள் யாவை? அவற்றை தடுக்கும் நெறிமுறைகளைப் பற்றி விளக்கி எழுதுக. (15)

3. நகரங்களை அமைக்க நம் முன்னோர்கள் அனுசரித்த விதிமுறைகள்யாவை? நோயில்லா வாழ்வு வாழ அவை எங்ஙனம் உதவின என்பதைப் பற்றி விளக்கி எழுதுக. (20)

SECTION B

4. கர்ப்பிணிகள், கைக்குழந்தைகளுடைய தாய் மார்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள், குழந்தை களுக்கு தாய்ப்பாலின் அவசியம் சரியா? தாய்ப்பால் இல்லா குழந்தைகளுக்கு முதல் ஆண்டு வரை எங்ஙனம் போடணம் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி விளக்குக. (15)

5. (அ) உயிர் வாழ்வதற்கு சுவாசத்தின் இன்றிய மையாத தன்மையையும் தக்க முறையில் பயின்ற மூச்சுப் பயிற்சியால் நாம் பெறும் நன்மைகளையும் விவரி. (10)

(ஆ) திரிதோட சமப் பொருள் – பற்றி விளக்குக. (5)

6. வீடுகட்டுவதற்கு சகல வசதிகளையும் பெறுவதற் குரிய வீட்டை எப்படி அமைக்க வேண்டும், சரியாக அமையாவிட்டால் உண்டாகும் கெடுதல் யாவை? வீடு கட்டத் தகுந்த மனையடி இலக்கணத்தை பற்றி விளக்குக. (20)

## OCTOBER 1999

**[KA 1111]**

சித்த மருத்துவ அறிஞர்

FOURTH B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — NOI ANUGAAVIDHI OZHUKKAM ETC.

(நோய் அணுகாவிதி ஒழுக்கம்)

Time : Three hours  Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

### SECTION A

1. அம்மை நோய் பரவாது தடுப்பதற்கும், அந்நோயுற்ற போது தீவிரமாகாது காப்பதற்கும் கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகள் சான்றுகளுடன் விளக்கவும். (20)

2. நீரின் அவசியம், கிணற்று நீர் குணம், கிணற்றை பாதுகாக்கும் விதம், நீவிர் கண்ட நீர் சுத்திகரிக்கும் நிலையத்தில் நீர் எவ்வாறு (நவீன முறைப்படி) சுத்தி கரிக்கப்படுகிறது என்பதைப் பற்றி விளக்கி எழுதுக. (15)

3. நித்திரை செய்யும் விதம், காலம், அளவு, நித் திரையின்மை, பங்கம் இவற்றால் உண்டாகும் குற்றம், வராது தடுக்கும் முறை விளக்குக. (15)

### SECTION B

4. (அ) உடற்பயிற்சியின் நன்மைகள், உணவாதிகள், ஏற்ற காலம், இடம், அளவு, செய்யத்தகாதவர்கள் விவரி. (15)

(ஆ) வெந்நீரின் குணம். (5)

5. தொழிற்சாலைகளில் பணிபுரிவோர்க்கு தோன்றும் நோய்கள் யாவை? அந்நோய்கள் அணுகாது இருக்க மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகளை பற்றி விளக்குக. (15)

6. கால ஒழுக்கங்களில் நலமான வாழ்விற்கு கடைப்பிடிக்க வேண்டிய விதி மற்றும் உணவு முறைகளைப் பற்றி விளக்குக. (15)

———————

APRIL 2000

[KB 1111]

FOURTH B.S.M.S DEGREE EXAMINATION.

(Old/New/Revised Regulations)

Paper I — NOI ANUGAA VIDHI OZHUKKAM ETC.

Time : Three hours Maximum : 100 marks

Answer ALL questions.

## SECTION A

1. (அ) பாதுகாக்கப்பட்ட குடிநீர் எவ்வாறு வழங்கப் படுகிறது? சித்த மற்றும் தற்கால மருத்துவ அறிவியலுடன் ஒப்பு நோக்குக.

(ஆ) நீரின் மூலம் பரவும் நோய்கள் யாவை? அவற்றைத் தடுப்பது எங்ஙனம்? (20)

2. 'கால ஒழுக்கம்' என்ற தொடரின் மூலம் நீவிர் அறிவது என்ன? (15)

3. விண் தீ என்பது யாது? ஆதித்தனின் ஒளியும் வெப்பமும் நமக்கு எவ்வாறு பயன்படுகிறது? (15)

## SECTION B

4. தாரோஷ்ண சிகிச்சை என்பது யாது? பாலின் நீரளவு, காய்ச்சும் விதி, அருந்தும் விதி, பாலினால் உண்டாகும் நோய்கள் இவற்றினை விளக்குக. (15)

5. நமது உடலில் தோன்றும் கிருமிகளை வகைப்படுத்தி அவற்றினைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை விளக்குக. (15)

6. தேரையர் கூறிய நோயில்லாமல் வாழ்வதற்குரிய நெறிமுறைகளை விளக்குக. (20)

## OCTOBER 2000

**[KC 1111]**

FOURTH B.S.M.S. DEGREE EXAMINATION.

(Old/New/Revised Regulations)

Paper I — NOI ANUGAA VIDHI OZHUKKAM ETC.

Time : Three hours Maximum : 100 marks

Answer ALL questions.

Answer Sections A and B in separate answer books.

### SECTION A

1. நோய் அணுகா விதி ஒழுக்கம் பற்றித் தேரையர் கூறும் நெறிகள் யாவை? (20)

2. நோயை அணுகவொட்டாமல் தடுப்பதற்கு மக்கள் உணவு முறைகளில் அனுசரிக்க வேண்டிய விதிகள் என்ன? (15)

3. (அ) கருவுற்ற மாதர்கள் முதல் பத்து திங்களில் கொள்ள வேண்டிய மருந்துகள் யாவை? (10)

(ஆ) பாவண பஞ்சாங்குலத் தைலம் செய்முறை மற்றும் வழங்கும் முறைகள் யாவை? (5)

### SECTION B

4. நகரங்களில் ஏற்படும் கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி அவை எவ்வாறு அப்புறப்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குக. (20)

5. சிறு குறிப்பு வரைக : (15)

(அ) தாரோஷ்ண சிகிச்சை

(ஆ) இட சுத்தி

(இ) பஞ்சமுட்டிக் கஞ்சி

(ஈ) கம்போசிட் உரம்

(உ) நீரைத் தெளிய வைக்கும் உபாயங்கள்.

6. உடற்பயிற்சியினால் உண்டாகும் நன்மைகள், மேற்கொள்ள வேண்டிய உணவாதிகள், ஏற்ற காலம், இடம், அளவு, பயிற்சி செய்யத் தகாதவர்கள் முதலியவற்றை விவரி. (15)

———————